உடனடியாக வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படுமா? இப்போது பல கோவில்களில் வருடாந்திர, மாதாந்தர கட்டளைகள் எல்லாம் சரியாக நடத்தப்படவில்லை என்பதையும் கவனித்து உடனடியாக அவற்றையும் சீர்திருத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இதுபோன்ற அற நிலையங்களில் அதுவும் பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிற அறநிலையங்களில் அறநிலையத்துறையின் நேரடி ஆதிக்கத்திற் குட்பட்ட நிர்வாக அலுவலர்களை நியமிக்க முடிவதில்லை. இந்த தேவஸ்தானத்தில் கூட உயர்நீதிமன்ற விதிகளின்படி அந்த ஸ்கீம்படி அந்த் தேவஸ்தான பரம்பரை அறங்காவலரே ஒரு நிர்வாகியை நியமித்துக்கொள்ளலாம் என்பது விதி. ஆகவே, நமது நேரடி நிர்வாகத்தின் கீழ் அந்த ஆலயங்கள் வர முடிவ தில்லை. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி பரம்பரை அறங்காவலர்களிடம் துணை ஆணையர் கேள்விகள் எழுப்பி விளக் கங்கள் கேட்கிறார்கள். பரம்பரை அறங்காவலர்கள் உங்களுக்கு கேட்க அதிகாரம் இல்லை என்று பதில் தருகிறார்கள். அதற்கு மேல் ஆணையரிடம் மனு செய்தார்கள். அவர்கள் அதைத் தள்ளு படி செய்திருக்கிறார்கள். இப்போது அரசாங்க மட்டத்தில் அவர்கள் அப்பீல் செய்யும் நிலைமையில் இருக்கிறார்கள். இப் படித்தான் நிலைமை நீண்டுகொண்டிருக்கிறது. ஏதாவது சட்ட திட்டங்களபடி இவைகளுக்குப் பரிகாரம் கண்டாலொழிய இப் படிப்பட்ட தவறுகளை நீக்க முடியாத ஒரு சூழ்நிலை, ஒரு பரிதாபத்திற்குரிய சூழ்நிலை, கோடிக்கணக்கான சொத்துக்களை பல பேர்கள் தெரிந்தோ, தெரியாமலோ கொள்ளையடிக்கிறார் கள் என்று சொல்கிற அளவிற்குத்தான் நிலைமைகள் தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஆண்டவன்தான் வழி காட்ட வேண்டும்.

கோடிக்காட்டிலுள்ள கோயில், மற்றும் கிராமக் காடுகளை காட்டிலாக்கா வில் சேர்த்தல்.

*வினா எண். 455—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு மிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோடியக்காட்டில் உள்ள கோயில் மற்றும் கிராமக் காடுகளை காட்டிலாக்காவில் சேர்க்க உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) கோடியக்காட்டில் உள்ள வன விலங்குப் புகலிடத்தின் பராமரிப்புக்காகவும், வன விலங்குகளின் பாதுகாப்புக்காகவும், வனவிலங்குப் புகலிடத்தை ஒட்டியுள்ள கிராமக் காடுகளையும், கோயில் நிலங்களையும் அரசு எடுத்துக்கொள்ள முடிவு செய் துள்ளது.

1981 மார்ச் 24]

திரு. எம். எஸ். மாணிக்கம் : அந்தக் கிராமத்தில் இருக்கிற கிராமக் காடுகளை, கோவில் காடுகளை எடுத்துக்கொள்வதில், கிராம மக்களுக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், கிராமக்காடு களிலிலிருந்துதான் அந்த கிராம மக்கள் தங்கள் இறுதிகாலத் திற்கு வேண்டிய விறகுகளை வெட்டி அதைப் பயன் படுத்தி வருகிறார்கள். ஆகவே, அதை மறுத்துவிடாமல் அதற்கு மட்டு மாவது விட்டுவைக்க அரசு முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கோடியக்கரைப்பகுதி என்பது வனப்பகுதி. அது வன விலங்குகள், பறவைகள் புக லிடங்களாக, சரணாலயங்களாக சர்க்காரால் சட்டம் இயற்றப் பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கிருக்கிற மிக உயர்ந்த அதிசயமான பிராணிகளை, மிருகங்களை, பறவைகளைக் காப்பாற்றுவதற்கு அந்த சுற்றியுள்ள நிலங்களை எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பி னர் அவர்கள் சொன்னது போல், அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து விறகுகளை காடுகளிலிலிருந்துதான் பெற வேண்டும் என்பதில்லை அந்தக் காடுகளிலிலிருந்து விறகுகளுக்காக வெட்டினால், இப் போதே காடுகள் அழிந்துகொண்டிருக்கும் நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு மாற்று ஏற் பாடுகள் தெரிவித்தால் அல்லது வேண்டுகோள் வைப்பார்களா னால் அதற்குரிய மாற்று ஏற்பாடுகளை அரசு கவனித்து அந்தப் பகுதி மக்களுக்கு விறகு தருவதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : இந்தக் கிராமக் காடுகள்தான் அந்த கிராம மக்களுக்கு அவர்கள் வளர்க்கிற ஆடுமாடுகளுக் கெல்லாம் மேய்ச்சல் நிலங்களாகப் பயன்படுகிறது. ஆகவே, அவற்றை அரசு எடுத்துக்கொண்டால் மேய்ச்சல் நிலத்திற்கு நிலம் இல்லாமல், அவற்றை மேய்ச்சல் நிலமாக பயன்படுத்தப்பட முடியாமல் போய்விடும். எனவே, மேய்ச்சல் நிலம் என்று மேய்ச் சலுக்காகக் கொஞ்சம் இடமாவது ஒதுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்தப் பகுதியிலே எந்தளவிற்கு அந்த எல்லைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களைக் கேட்டறிந்து மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் வைத்திருக்கிற கோரிக்கையை ஏற்க இயலுமா என்பது பற்றி வனத்துறையோடு அரசு பரிசீலித்து திட்டத்தை மேற்கொள்ளும்.

[முற்பகல் 9–20]

திரு. என். பழனிவேல் ; தலைவர் அவர்களே, இத்தகைய கிராமக் காடுகளை வனத்துறை எடுப்பதிலே எந்தவிதமான ஆட் சேபணையும் இல்லை. ஆனால், சாதாரண ஏழை எளிய மக்கள் சில இடங்களில், காடுகள் இல்லாத புறம்போக்கு புல்வெளி தரிசுகள் போன்ற இடங்களில் 1 ஏக்கர், 2 ஏக்கர்களை வைத்துக்கொண்டு வாழக்கூடிய இடங்கள் தமிழகத்தில் நிறைய

இருக்கின்றன. குறிப்பாக, மதுரை மாவட்டத்திலே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை யொட்டி பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகிறார்கள். வனத் துறைக்குத் தேவையில்லாத, காடுகள் அல்லாத இம்மாதிரியான நிலங்களை சர்வே செய்து, அவைகளை ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பற்றக் கேள்வி. என்றாலும், இதன் விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காலியாக அல்லது காடுகள் அல்லாத பகுதிகளில்வசிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார்கள். நம்முடை நிலப்பரப்பிலே மூன்றில் ஒரு பங்கு பகுதி காடாக இருக்க வேண்டுமென்பது உலக நியதி. அதை இந்திய அரசும், மாநில அரசும் ஏற்றுக்கொண்ட நியதி. ஆனால், 16 சதவீதம் தான் நாம் காடாக வைத்துக்கொண்டிருக்கிறோம். மற்றப் பகுதிகளைக் காடுகளாக்க மரங்கள் வளர்க்கும் திட்டத்தை ஆண்டு தோறும் பல கோடி ரூபாய் செலவழித்து நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். ஆகவே, அப்பேர்ப்பட்ட பகுதிகளில் காடுகளாக்க மரங்களை நடும் திட்டத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, நீண்டகாலமாக அங்கே ஏழை எளிய மக்கள் விவசாயம் செய்துகொண்டு, வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்கின்ற விவரங்களைத் தனியாகக் குறிப்பிட்ட பகுதிகளைக் காட்டி, அரசாங்கத்திற்குத் தெரிவித்தால், சம்பந்தப்பட்ட இடத்தைப் பற்றித் தனியாக விவரங்கள் சேகரித்து, ஆணைகள் பிறப்பிப்பதற்கோ அல்லது மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கோ அரசு முயலும்.

வேடந்தாங்கல் பறவைகள் புகலிடம்.

வினா எண். 456—திரு. து. புருஷோத்தமன் : மற்றும் திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடந்தாங்கல் பறவைகள் புகலிடத்தை மேம்படுத்தி பார்வையாளர்கள் வசதிக்காக அங்கு தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS